## ஊத்துக்கோட்டையில்

# 872 ஏக்கரில் தமிழ்நாடு அறிவுசார் நகரம்!

## "இந்தியா உலகளாவிய கல்வி மாநாட்டில்" முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!

## பல்வேறு நாடுகளின் கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

**சென்னை, ஜன. 30 -**


**இந்தியா உலகளாவிய கல்வி மாநாட்டில் தமிழ்நாடு அறிவுசார் நகரத்திற்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் விருப்பக் கடிதங்கள் கையெழுத்திடப்பட்டன.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2026) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், "இந்தியா உலகளாவிய கல்வி மாநாடு 2026" (India Global Education Summit 2026) தொடக்க விழாவில் 'தமிழ்நாடு அறிவுசார் நகரம்' (The Tamil Nadu Knowledge City) திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், அறிவு, புதுமை மற்றும் திறன் மேம்பாட்டின் உலகளாவிய மையமாக தமிழ்நாட்டினை வலுப்படுத்தும் விதமாக பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் விருப்பக் கடிதங்கள் (Letter of Intent) கையெழுத்திடப்பட்டன.

திராவிட மாடல் அரசு வாய்ப்புகளுக்கான அணுகுமுறையை அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளித்து, கல்வி, சுகாதாரம் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறந்த முன்னோடி திட்டங்களை செயல்படுத்தியதின் மூலம், தமிழ்நாடு தற்போது உற்பத்தித் துறையின் மையமாகவும், இந்தியாவின் கல்வித் தலைநகரமாகவும் திகழ்கிறது. உலகின் முதல் 50 பொருளாதாரங்களுக்கு நிகரான வலிமையுடன், 11.19 சதவிகிதம் என்ற இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய இந்தியாவின் ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

இந்தியாவில் மிக வலுவான உயர்கல்வி கட்டமைப்பை கொண்ட மாநிலங்களில் ஒன்றாகவும், மிக உயர்ந்த மாணவர் சேர்க்கை விகிதத்தைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு அரசின் இலட்சியம் உலகளாவிய கல்வியில் பங்கேற்பது மட்டுமல்ல; அதில் தலைமை தாங்குவது ஆகும். அதனால் தான் இந்தியாவின் மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த இந்திய உலகளாவிய கல்வி மாநாட்டை இந்தியாவில் முதல் முறையாக NISAU உடன் இணைந்து தமிழ்நாடு




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2026) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், "இந்தியா உலகளாவிய கல்வி மாநாடு 2026" (India Global Education Summit 2026) தொடக்க விழாவில் 'தமிழ்நாடு அறிவுசார் நகரம்' (Tamil Nadu Knowledge City) திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த மாநாட்டில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், உயர் அதிகாரிகள் வி. அருண் ராய், முனைவர் பொ. சங்கர், திருமதி சந்தியா வேணுகோபால் சர்மா, சந்தீப் நந்தூரி, OP ஜிண்டால் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் தினேஷ் சிங், University of East துணை வேந்தர் பேராசிரியர் அமண்டா புரோடெரிக், NISAU நிறுவனத் தலைவர் சனம் அரோரா, கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள், பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நடத்துகிறது. கல்வி, புத்தாக்கம், வேலைவாய்ப்பு மற்றும் உலகளாவிய கூட்டாண்மை ஆகிய அனைத்தும் ஒன்றிணையும் ஒரு தளமாக இந்த மாநாடு விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாடு அறிவுசார் நகரம் அடிக்கல் நாட்டுதல்!

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்துகுளம், மேல்மளிகைப்பட்டு மற்றும் இனாம் பாக்கம் கிராமத்தில் 872 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாடு அறிவுசார் நகரத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

உயர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அறிவுசார்ந்த ஒரு சூழலை உருவாக்கி, தமிழ்நாட்டை அறிவுசார் சிறப்பிற்கான உலகளாவிய மையமாக நிலை நிறுத்துவதை நோக்கமாக கொண்டு தமிழ்நாடு அறிவுசார் நகரம் அமைக்கப்படவுள்ளது.

இந்நகரம், தனித்தனி நிறுவனங்களின் தொகுப்பாக இல்லாமல், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் நிறுவனங்கள் தடையின்றி ஒன்றிணையும் ஒரு ஒருங்கிணைந்த நிலப்பரப்பாக இருக்கும். வரும் ஆண்டுகளில், உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் மற்றும் புத்தாக்கக் குழுக்களுடன் இணைந்து 25,000க்கும் மேற்பட்ட கற்பவர்களை இது உருவாக்கும்.

### விருப்பக் கடிதங்கள் கையெழுத்திடப்பட்டன!

**மெல்போர்ன் பல்கலைக்கழகம்** – குவாண்டம் கணினி மற்றும் வேளாண் தொழில்நுட்ப துறைகளில் பயன்பாட்டு ஆராய்ச்சி மையத்தை 20,000 சதுர அடியில் 35 கோடி ரூபாய் முதலீட்டில் ஐந்து ஆண்டுகளில் Knowledge Corridorஐ நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுதிடப்பட்டன. இதன்மூலம் 25 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 200 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

**ஐஐடி சென்னை – மேம்பட்ட ஆட்டோமொட்டிவ் ஆராய்ச்சி மையம்,** மின்சார வாகனங்களுக்கான மாற்று ஆராய்ச்சி மையம் மற்றும் சோதனை ஆய்வகத்தை 40,000 சதுர அடியில் 200 கோடி ரூபாய் முதலீட்டில் Knowledge Towerல் நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுதிடப்பட்டன. இதன்மூலம் 100 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 2,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

**ஐஐடி சென்னை குளோபல்** 20,000 சதுர அடியில் அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி திறன் வசதி மையத்தை மேம்பட்ட திறன் மற்றும் புதுமையை முன்னெடுக்கும் வகையில் நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுதிடப்பட்டன.

**ஆர்க்ஸீ**, கார்பன் பிடிப்பு மற்றும் நிலைத்தன்மை துறையில் 10,000 சதுர அடியில் ஆராய்ச்சி ஆய்வகத்தை நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுதிடப்பட்டன.

**அக்யூமென்**, TIDCO உடன் இணைந்து 120 கோடி ரூபாய் முதலீட்டில் Knowledge Cityயை மேம்படுத்தும் நோக்கில் கூட்டாண்மை திட்டங்களை செயல்படுத்த விருப்பக் கடிதம் கையெழுதிடப்பட்டன. இதன்மூலம் 150 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 2,500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

**தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம்** (Guidance Tamil Nadu) உலகின் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

**ஐஐடி சென்னை குளோபல்** உலகளாவிய திறன் மேம்பாடு, AI மற்றும் செமிகண்டக்டர் துறைகளில் மேம்பட்ட திறன் பயிற்சி மற்றும் ஸ்டார்ட்அப் புதுமை முன்னேற்றத்திற்கான கூட்டாண்மை திட்டங்களுக்கு வழிவகை செய்திடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**இலினாய்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி** - சென்னையில் மேம்பட்ட உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் HealthAI துறைகளில் சிறப்பு மையத்தை நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்** உடன் இணைந்து, உலகத் தமிழ் ஆராய்ச்சி கூட்டாண்மையில் வரலாற்று ஆவணங்களை டிஜிட்டல் வடிவில் மாற்றுதல், மொழி கற்றல் வளங்களை விரிவாக்குதல் மற்றும் கல்வி பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

Chartered Institute of Procurement and Supply Tier 2 மற்றும் Tier 3 நகரங்களில் கிளை அலுவலகங்களை நிறுவி, நிறுவன வலையமைப்புகளை புதிய வாய்ப்புகளுடன் இணைக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**அடோப்** உயர்கல்வி மாணவர்களுக்கு இலவச Creative AI உரிமங்களை வழங்கி, இளைஞர்களை அதிநவீன டிஜிட்டல் கருவிகள் பயன்பாட்டில் வலுப்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

TIDCO நிறுவனம், University of East London உடன் புதுமை மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

NISAU உடன் திறன் மேம்பாட்டை வலுப்படுத்தவும், TIDCO திட்டங்களில் கூட்டாண்மையால் முதலீட்டை ஈர்க்க வழிவகை செய்திடவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாநாட்டில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், உயர் அதிகாரிகள் வி.அருண்ராய், முனைவர் பொ. சங்கர், திருமதி சந்தியா வேணுகோபால் சர்மா, சந்தீப் நந்தூரி, OP ஜிண்டால் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் தினேஷ் சிங், University of East துணை வேந்தர் பேராசிரியர் அமண்டா புரோடெரிக், NISAU நிறுவனத் தலைவர் சனம் அரோரா, கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள், பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாட்டில் முதல்வர் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்கா விதித்திருக்கும் 50 விழுக்காடு வரியால் பெரிய அளவில் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருந்து மீண்டு, புதிய சந்தைகளை கண்டறிவது, வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடத்துவது, பருத்திக்கான

11 விழுக்காடு இறக்குமதி வரியை நீக்குவதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்துவதுபோன்றபலமுயற்சிகளை நாம் செய்து வருகிறோம்!

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ள நிலையில், இந்த மாநாடு மேலும் முக்கியத்துவம் பெறுகிறது! ஜவுளித் தொழிலுக்கான கண்காட்சி, ஃபேஷன் ஷோ, வாங்குவோர் - விற்போர் சந்திப்பு, கருத்தரங்குகள், விருதுநகரில் அமையவுள்ள PM மித்ரா ஜவுளிப் பூங்கா தொடர்பான 'ரோடுஷோ' ஆகியவை நடைபெற இருக்கிறது.

### ரூ.915 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

அண்மையில், கோவை, மதுரை, தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாடுகள் மூலமாக, ஜவுளித்தொழிலுக்கு மட்டும் 9 ஆயிரத்து 764 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டு இருக்கிறோம். இந்த மாநாட்டிலும், 915 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது!

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் 'ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை 2025-2026'யையும் இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. பல்வேறு வேலை பளு காரணமாக நேரில் வந்து உங்களை சந்திக்க முடியவில்லையென்றாலும், உங்களுக்கான ஒரு சிறப்பு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

### 20 சதவிகித மூலதன முதலீட்டு மானியம்!

பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று ஜவுளி நிறுவனங்களுக்கு, அதிநவீன நெசவு மற்றும் பின்னலாடை இயந்திரங்களை கொள்முதல் செய்ய 20 விழுக்காடு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்காக, ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

அதேநேரத்தில், இந்த மாநாட்டில் கூடியிருக்கும் இந்தியா மற்றும், வெளிநாடுகளை சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன்.

மிகச்சிறந்த உட்கட்டமைப்பைக் கொண்ட தமிழ்நாட்டில் முதலீடு செய்து, நீங்களும் வளர்ந்து, தமிழ்நாட்டிற்கும் வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் திராவிட மாடலின் பெருங்கனவில், ஜவுளித் தொழில் கணிசமான பங்கு வகிக்க வேண்டும். இந்த மாநாட்டின் வெற்றி அதற்கு பெரிதும் உதவும் என்று தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## இராமநாதபுரம் வருகை தர இருந்த – கழகத்

# தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு ஆலோசனை கூட்டம் ஒத்தி வைப்பு!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை!



*இராமநாதபுரம், ஜன. 30 -*

*தேர்தல் தலைமைக்கழக அறிவிப்பின்படி சட்டமன்ற 2026. தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுக் கூட்டம் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் இன்று (30.01.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணியளவில் இராமநாதபுரம், கேணிக்கரை யாஃபா மகாலில் நடைபெற இருந்த ஆலோசனை கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*இந்நிகழ்ச்சிக்கு புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும்.*

இவ்வாறு மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

## தொடரும் தோல்விக் கூட்டணி

